# செய்தி வெளியீடு

## ராஜ்பவன் மூலம் அறநிலையத் துறையின் 10 கோயில்களின் “கோசாலா”க்களில் பசுந் தீவனம் வழங்க ஏற்பாடு

ராஜ்பவனில் பயிரிடப்பட்ட பசுந் தீவனப் புற்களை இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 10 கோயில்கள் மற்றும் உத்தரமேரூரில் உள்ள ஒரு ‘கோசாலா’விற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் இன்று (01.09.2018) வழங்கினார்.

பொது மக்களால் தானமாக வழங்கப்படும் பசுக்களும் மற்றும் பராமரிக்க முடியாமல் கைவிடப்படும் பசுக்களும் அறநிலையத் துறையின் கீழ் செயல்படும் ‘கோசாலா’க்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பசுக்கள் இறைச்சிக்காக வதைக்கப்படுவதைத் தடுப்பதே ‘கோசாலா’க்கள் பராமரிக்கப்படுவதன் நோக்கமாகும். சென்னையில் உள்ள ‘கோசாலா’க்களுக்கு பசுந் தீவனங்கள் கிடைப்பது கடினமாகி வருகிறது.

ராஜ்பவன் தரிசு நிலத்தில் தீவனப்புல் 3 மாதங்களுக்கு முன்பு பயிரிடப்பட்டு, பல டன் எடையுள்ள பசுந்தீவனங்கள் இன்று அறுவடை செய்யப்பட்டது.

பசுந் தீவனத்தில் உலர் தீவனத்தைவிட அதிக புரதம், கார்போஹைட்ரேட் மற்றும் பிற சத்துக்கள் உள்ளதாலும், இது எளிதில் சீரனமாகக் கூடியதாலும், கோடை காலங்களில் வறட்சியான நிலங்களிலும் வளர்ந்து பயன்தரும் தன்மை கொண்டதாலும் பசுந் தீவனத்தை வளர்க்க ராஜ்பவனில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி, அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், வில்லிவாக்கம், அருள்மிகு ஆதித்யாதி ஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில், நங்கநல்லூர், அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், தேனாம்பேட்டை, அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் மிண்ட் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் உட்பட 10 திருக்கோயில்களின் 'கோசாலா'க்கள் மற்றும் உத்திரமேரூரில் உள்ள 'கோசாலா'வில் பராமரிக்கப்பட்டு வரும் 250 பசுக்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் பசுந்தீவனங்களை இன்று திருக்கோயில்களின் செயல் அலுவலர்களிடம் வழங்கினார். கிருஷ்ண ஜெயந்தி நாளை தமிழ்நாட்டில் கொண்டாடப்பட உள்ள நிலையில் மாடுகளுக்கு தீவனம் கிடைக்கும் வண்ணம் ராஜ்பவன் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதை கோயில்களின் செயல் அலுவலர்கள் பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை-22 ஒம்/-

நாள் : 01.09.2018 .இணை இயக்குநர் (ம.தொ)

## Press release

Thiru Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu distributed Green fodder sorghum to the 10 Goshalas maintained by Hindu Religious and Charitable Endowment Department and a Goshala in Uthiramerur at Raj Bhavan, Chennai today (01.09.2018).

The cattles offered by the people and abandoned cattles are being taken care by the Goshalas. The Ghosalas protect this cattles from being slaughter. In Chennai, the Goshalas are facing difficulties in getting green fodder to the cattle.

As a constructive measure, uncultivated lands in Raj Bhavan were brought under fodder cultivation 3 months back and a few tonnes of fodder were produced for the benefit of 250 cattles for 10 Ghosalas of Hindu Religious and Charitable Endowment Department and a Ghosala in Uthiramerur.

Green fodder sorghum is easily cultivable in dry lands. It is easily digestible and contains more protein, carbohydrate and other nutrients when compared to dry fodder. It can very well replace the dry fodder requirement to the cattle and reduce the water consumption during summer.

As a good will measure Hon'ble Governor distributed the fodder to the Ghosalas of Arulmigu Kapaleeswarar temple, Mylapore. Arulmigu Vadapalani Andavar temple, Vadapalani, Arulmigu Parthasarathy temple, Triplicane, Arulmigu Thiyagaraja Swamy temple, Thiruvottiyur, Arulmigu Maruntheeswarar temple, Thiruvanmiyur, Arulmigu Agastheeswarar temple

Villivakkam, Aadhi Vyadhi Hara Bhaktha Anjaneyar Temple, Nanganallur, Arulmigu Bala Subramaniya Swamy temple, Teynampet, Arulmigu Adhipureeswarar & Adhikesava Perumal temple, Chindadripet and Arulmigu Ekampareswarer temple, Mint and to the Goshala, Uthiramerur. The Executive officers of the temples received the fodder from the Hon'ble Governor. They welcomed the steps taken by Raj Bhavan to provide Green fodder today when Tamil Nadu is going to celebrate Krishna Jayanthi tomorrow.

On this occasion Thiru R. Rajagopal I.A.S., Additional Chief Secretary to Hon'ble Governor, Officials from Hindu Religious and Charitable Endowment Department were present.

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date: 01.09.2018 Joint Director (PR)